

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 128 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 03 – வியாழக்கிழமை 18 டிசம்பர் 2025 – சென்னை 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 128 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 03 - Thursday 18 December 2025 - Chennai 20 Pages ₹ 5.00


## காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதில்

# தமிழ்நாடு இந்தியாவிற்கே வழி காட்டுகிறது!

### காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, டிச. 18 -**

**“காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் தமிழ்நாடு இந்தியாவிற்கே வழிகாட்டுகிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழு கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.12.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற, 3வது தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழு கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழுவின் மூன்றாவது கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இப்போது கண்கூடாக பார்த்துகொண்டு இருக்கிறோம். இப்போது கூட, “டித்வா புயல்” எப்படிப்பட்ட கோர தாண்டவத்தை ஆடியது, அதனால் இலங்கை உள்ளிட்ட நாடுகள் எப்படி பாதிக்கப்பட்டது என்று பார்த்தோம்.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் பாதிப்பு தவிர்ப்பு!**

நம்முடைய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வந்த பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால், பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாமல் தமிழ்நாட்டை காப்பாற்றியிருக்கிறோம். எப்போதோ ஒருமுறை, புயல் - வெள்ளங்களை எதிர்கொண்ட காலத்தை எல்லாம் நாம் கடந்து விட்டோம். அதை உணர்ந்து தான் 3 ஆண்டுகளுக்கு முன்பே இந்த பேரிடர்களுக்கேற்ற தடுப்பு மற்றும் தகவமைப்பு உட்கட்டமைப்புகளை தொடங்கிவிட்டோம்.

- காலநிலை மாற்ற ஆட்சிமன்றக் குழு
- பசுமைத் தமிழ்நாடு இயக்கம்
- தமிழ்நாடு ஈரநில இயக்கம்
- தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்
- தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்

என்று நாம் Advanceஆக நிறைய செய்து கொண்டிருக்கிறோம். இதனால், இந்தியாவிற்கே வழிகாட்டும் நிலையில் தமிழ்நாடு இருக்கிறது.

கடந்த கூட்டத்தில் கூட, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தீர்கள். அதை அடிப்படையாக வைத்து, கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில், 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காலநிலைக் கல்வியறிவு முன்னெடுப்பு குறித்த அறிவிப்பை வெளியிட்டோம். அதைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் திறமைமிகு 4 ஆயிரம் பள்ளியாசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். மிக விரைவில், காலநிலைக் கல்வியறிவு குறித்த பயிற்சிகள் வழங்கப்பட இருக்கிறது என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

**விழிப்புணர்வு ஏற்படுத்த மாணவர்களுக்கு முகாம்கள்!**

அதுமட்டுமல்லாமல், பள்ளி மாணவர்களுக்கு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்த ஆண்டுக்கு இரண்டு முறை, மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் மூலமாக, நடத்தப்படும் ஒரு நாள் கோடைக்கால மற்றும் குளிர்கால சிறப்பு முகாம்களை இரண்டு நாள் முகாம்களாக பள்ளிக் கல்வித்துறை மூலமாக நடத்த ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மேலும், ‘கூல் ரூஃபிங்’ திட்டத்தை, தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் 2025 - 26ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் சேர்த்திருக்கிறோம். அம்பத்தூரில் இருக்கும் பெருந்தலைவர் காமராஜர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (17.12.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழுவின் மூன்றாவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், எஸ்.எஸ். சிவசங்கர், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, மாநில திட்டக் குழு செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், நிலையான கடலோர மேலாண்மைக்கான தேசிய மையத்தின் இயக்குநர் பேராசிரியர் ரமேஷ் ராமச்சந்திரன், காணொலிக் காட்சி வாயிலாக பொருளாதார நிபுணர் மாண்டெக் சிங் அலுவாலியா, இன்போசிஸ் தலைவர் நந்தன் நிலெக்கணி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் இயக்குநர் மருத்துவர் சௌமியா சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜி. சுந்தரராஜன், ராம்கோ சமூக சேவைகள் தலைவர் திருமதி நிர்மலா ராஜா, தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள், அரசுத் துறையின் செயலாளர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

## பீகாரில் மகளிருக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தில் மெகா முறைகேடு அம்பலம்!

பாட்னா, டிச. 18 –

பீகாரில் சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்பு மகளிரின் வாக்குகளை பெறுவதற்காக ஐக்கிய ஜனதா தளம்–பா.ஜ.க., கூட்டணி அரசு சார்பில் அவர்களது வங்கிக்கணக்கில் 10 ஆயிரம் ரூபாய் செலுத் தப்பட்டது. சுமார் ஒரு கோடியே 40 லட்சம் பெண்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

இந்த திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்நிலையில், இந்த திட்டத்தில் மெகா முறைகேடு நடந்துள்ளது தற்போது அம்பலமாகியுள்ளது. பெண்களின் வங்கிக்கணக்கில் மட்டுமின்றி ஆண்களுக்கும் முறைகேடாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், ஆண்கள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் பணத்தை திரும்ப கேட்டு பீகார் அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. தர்பங்கா மாவட்டம் ஜாலே கிராமத்தில் மட்டும் 14 ஆண்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட பணத்தை திருப்பி தர முடியாது என ஆண் பயனாளிகள் மறுப்பு தெரிவித்துள்ளார். எங்கள் வாக்குகளை திருப்பி தந்தால்தான் பணத்தை திருப்பி தருவோம் என பீகார் மக்கள் தெரிவித்துள்ளனர்.

எங்கள் வாக்கால்தான் பா.ஜ.க. வெற்றி பெற்றது, வாக்களித்த உடன் கணக்கு தீர்ந்துவிட்டது என்று பீகார் மக்கள் பதிலடி கொடுத்துள்ளனர்.

## மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் வன்முறை – பதற்றம்!

மணிப்பூர், டிச. 18 –

மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. அங்கு மீண்டும் ஆட்சி அமைக்க பா.ஜ.க. ஆலோசனை நடத்தியிருந்த நிலையில் வன்முறை சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பா.ஜ.க. ஆட்சி நடைபெற்ற மணிப்பூரில், மைதேயி இன மக்களுக்கும் குகி இன மக்களுக்கும் இடையே கடந்த 2023ம் ஆண்டு பல்வேறு இடங்களில் வன்முறை வெடித்தது. இதில் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில் வேறு வழியின்றி, பா.ஜ.க.வைச் சேர்ந்த பைரன் சிங், முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

தற்போது அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் உள்ளது. இந்த நிலையில் சூரசந்த்பூர் மாவட்டத்தின் எல்லையை ஒட்டியுள்ள டோர்பங் மற்றும் பூகாக்சாவ் இகாய் பகுதிகளுக்கு அருகில் மர்மநபர்கள் பல சுற்றுகளாக துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர். வன்முறை நிகழ்ந்த இரு ஆண்டுகளுக்கு பின்னர், ஒரு பிரிவினர் முகாம்களில் இருந்து தங்களது வீடுகளுக்கு திரும்பிய மறுநாள் இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இதனை தடுக்க முற்பட்டபோது பாதுகாப்பு படையைச் சேர்ந்த சிலர் காயமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. மணிப்பூரில் பா.ஜ.க. மீண்டும் ஆட்சி அமைக்கும் விதமாக டெல்லியில் ஆலோசனை நடத்திய இரண்டு நாட்களில் இந்த வன்முறை ஏற்பட்டுள்ளது. இதனிடையே மணிப்பூர் வன்முறை தொடர்பான விசாரணை ஆணையத்தின் பதவி காலம் அடுத்தாண்டு மே 20ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

## போரூர் – பூந்தமல்லி இடையே மெட்ரோ பணிகள் தீவிரம்!

சென்னை, டிச. 18 –

சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகளின் பாதுகாப்பை மேலும் உறுதி செய்யும் வகையில் இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டத்தில் புதிய வசதி அறிமுகம் செய்யப்படுகிறது.

போரூர் – பூவிருந்தவல்லி இடையேயான வழித்தடத்தில் உள்ள 10 ரயில் நிலையங்களில் நடைமேடை தடுப்பு கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே, பூவிருந்தவல்லி போரூர் மெட்ரோ ரயில் பாதைக்கான சிக்னல் அமைப்புக்கு ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

பூவிருந்தவல்லி முதல் கலங்கரை விளக்கம் வரை உள்ள வழித்தடம் நான்கில் 26 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரெயில் பணிகள் நடந்து வருகிறது. முதற்கட்டமாக பூவிருந்தவல்லி முதல் போரூர் வரையிலான ஆளில்லா மெட்ரோ ரயில் சேவையின் இறுதி கட்டப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. 95 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இறுதிக்கட்டப் பணிகள் மற்றும் கட்டடக்கலைப் பணிகள் முழுவீச்சில் நடை பெறுகிறது. இந்த வழித்தடத்தில் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

## புதுவை பாரதியார் கிராம வங்கியின் பெயரில் “பாரதியார்” பெயர் நீக்கம்!

புதுச்சேரி, டிச. 18 –

புதுவை பாரதியார் கிராம வங்கியின் பெயரில் இருந்து, பாரதியார் என்ற வார்த்தையை ஒன்றிய அரசு நீக்கியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

புதுவை பாரதியார் கிராம வங்கி புதுச்சேரியில் பல்வேறு பகுதிகளில் செயல் படுகிறது. தற்போது அதன் பெயர் புதுச்சேரி கிராம வங்கி என மாற்றப்பட்டுள்ளது. அதன் சின்னமும் மாற்றி அறிவிப்புகள் வைக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரியில் கிராம வங்கியில் பாரதியார் பெயர் நீக்கப்பட்டுள்ளதற்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். வங்கி தரப்பில் விசாரித்தபோது, ஒன்றிய அரசின் உத்தரவுக்கு இணங்க புதிய அரசாணை வெளியிட்டுள்ளது தெரிய வந்தது.

பாரதியார் பெயர் நீக்கப்பட்டுள்ளதால், இனி புதுச்சேரி கிராம வங்கி என அழைக்கப்படும்.

அரசாணையின்படியே, புதுவை பாரதியார் கிராம வங்கி புதுச்சேரி கிராம வங்கியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்:

## ஒன்றிய பா.ஜ.க. அரசு, பெயரை மாற்றியதில்

# எடப்பாடியின் நிலைப்பாடு என்ன?

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, டிச. 18 -**

**“மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பெயரை ஒன்றிய பா.ஜ.க. அரசு மாற்றியதில் எடப்பாடியின் நிலை என்ன?” என்று கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

பச்சைத்துண்டு போட்டுக் கொண்டு பச்சைத் துரோகம் செய்பவருக்கு, மீண்டும் விவசாயிகள் கண்ணில் தெரியவில்லையா? கிராமப்புற ஏழை மக்களின் வயிற்றிலேயே அடிக்கும் #VBGRAMG குறித்து எதிர்க்கட்சி அ.தி.மு.க.வின் நிலைப்பாடு என்ன?

**அமித்ஷாவுக்கு ஆமாம் சாமி போட்டு ஆதரவு தரப்போகிறாரா?**

#ThreeFarmLaws, #CAA போல இதிலும் அமித்ஷாவுக்கு ஆமாம் சாமி போட்டு ஆதரவு தரப்போகிறாரா திருவாளர் பழனிசாமி?

#MGNREGAவில் காந்தியடிகளின் பெயரை அகற்றிவிட்டு, சொன்னால் வாய் சுளுக்கிக் கொள்ளும்படி இந்தியில் பெயரிட்டிருக்கிறார்கள். இந்தித் திணிப்பை எதிர்த்து வென்ற பேரறிஞர் அண்ணாவின் பெயரைக் கட்சியின் பெயரில் வைத்துக் கொண்டு, இதை எதிர்க்கக் கூடவா தயக்கம்?

திட்டத்துக்கான நிபந்தனைகள் எல்லாம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில்! நிதிக்கு மட்டும் மாநில அரசு பங்களிக்க வேண்டும் என்பதை ADMK எந்த எதிர்ப்புமின்றி ஏற்றுக் கொள்கிறதா? உங்கள் தலைவி அம்மையார் ஜெயலலிதா அவர்கள் இதற்கு ஒப்புக்கொண்டிருப்பாரா?

**அ.தி.மு.க. என்ற பெயர் எதற்கு?**

வறுமையை ஒழித்த சாதனைக்குத் தண்டனையாக தமிழ்நாட்டில் நூறு நாள் வேலைத்திட்டமே நின்று போகும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளோம். இதற்கு, எப்படி முட்டு கொடுக்கப் போகிறார் எதிர்க்கட்சித் தலைவர்?

இவ்வளவு குனிந்து கும்பிடும் போடும் உங்களது கட்சிக்கு, “அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்” என்ற பெயர் எதற்கு?

நான் கேட்கவில்லை; தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



## நேஷனல் ஹெரால்டு வழக்கு - அரசியல் பழிவாங்கும் செயல் !

### காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, டிச. 18 -*

*நேஷனல் ஹெரால்டு வழக்கு அரசியல் பழி வாங்கும் விதமாக தொடரப்பட்ட வழக்கு என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றஞ்சாட்டியுள்ளார்.*

*நேஷனல் ஹெரால்டு வழக்கில் அமலாக்கத் துறையின் குற்றப் பத்திரிகையை டெல்லி நீதி மன்றம் நிராகரித்ததுடன், வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.*

*இது தொடர்பாக டெல்லியில் காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, அபிஷேக் சிங்வி ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.*

*அப்போது பேசிய கார்கே, 1938-ஆம் ஆண்டு ஆவணத்தை வைத்துக் கொண்டு அமலாக்கத்துறையும், சி.பி.ஐ.யும் விசாரணையில் இறங்கியதாக குற்றஞ்சாட்டினார்.*

*காங்கிரஸ் குடும்பத்தை அவமரியாதை செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த வழக்கு தொடரப்பட்டது என்று அவர் சாடினார்.*



*இந்த வழக்கை பா.ஜ.க.வினர் முழுமையாக அரசியலுக்கு பயன்படுத்தினார்கள் என்றும், ஆனால் இன்று நீதி வென்றுள்ளது என்றும் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.*

*போலி வழக்கை பதிவு செய்ததற்காக பிரதமர் மோடியும், அமித்ஷாவும் தங்களது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.*

*அரசியல் வழக்குகளை நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் உரிய முறையில் சந்திக்க காங்கிரஸ் கட்சி தயாராக இருப்பதாக தெரிவித்த கார்கே, இதுபோன்ற பொய் வழக்குகள் போட்டுதான் பழைய எம்.பி.க்களை பா.ஜ.க., அவர்கள் பக்கம் இழுத்தது என்று சாடினார்.*